மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஐப்பசி 15 ஸபர் 16 இதழ் 268
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 31-10-1985

## கொட்டும் மழை, இடிமுழக்கத்தினூடாக
# தொண்டமனாறு சம்பவம்
# இருவர் பலி! 8 பேர் காயம்!

(ஏ. வி. மாணிக்கம்)

தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோவில் சுற்றாடலை நோக்கி இடம் பெற்ற பீரங்கித் தாக்குதலில் வீடுகளில் இருந்த ஒரு சிறுவனும், வாலிபரும் குண்டுபட்டு பலியானார்கள். 5 ஆண்களும், 3 பெண்களும் படுகாயமுற்றார்கள். பலவீடுகள் பலத்த சேதமடைந்தன. நேற்றுமுன்தினம் இரவு சுமார் 9-30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது:

தொண்டமானாறு பகுதியில் துறை வீதியிலுள்ள குடிசை ஒன்றில் பெற்றோருடன் விளையாடிக்கொண்டிருந்த தி. சுஜேந்திரன் (8 வயது) என்னும் குழந்தையும் செல்வச்சந்நிதி கோவிலுக்குக் கிழக்குப்பக்கமாக உள்ள வீட்டிலிருந்த பராராஜசிங்கம் (29வயது) வாலிபருமே பலியானவர்களாவர்.

இவர் மேற்படி கோவிலில் தொண்டராக இருப்பவர் என்றும் அண்மையில் திருமணத்துக்கு நிச்சயதார்த்தம் செய்யப்பட்டிருந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றும் படுகாயமடைந்தவர்களில் க. சின்னமணி (பெண்), இ. சுஜாட்சுமி (பெண்), சுப்பிரமணியம் (ஆண்) ஆகியோர் பருத்தித்துறை மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 9-30 மணியளவில் இடிமுழக்கத்துடன் இப்பகுதியில் கடும் மழை பெய்து தொடங்கவே தொண்டமானாறு இராணுவ முகாமிலிருந்தும் பீரங்கிச்சூட்டுச் சத்தங்கள் கேட்டதாகவும், அதனைத் தொடர்ந்து பீரங்கிக்குண்டுகள் தாக்கி மேற்

(9-ம் பக்கம் பார்க்க)

## "இராணுவமுகாம் மீது றெக்கட், பீரங்கித் தாக்குதல்!"
### பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

தொண்டமானாறு இராணுவ முகாம் மீது நேற்று முன்தினமிரவு தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல்கள் தோல்வியில் முடிந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

முதலாவது தாக்குதல் இரவு 9-45 மணிக்கு இடம்பெற்றது என்றும், தீவிரவாதிகள் றொக்கெற்றினால் இயங்கும் குண்டு சிறியரக பீரங்கிகள், துப்பாக்கிகள் ஆகியவைகளைப் பாவித்தார்கள் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இரண்டாவது தாக்குதல் சுமார் ஒன்றரை மணிநேரத் திற்பின்னர் தீவிரவாதிகளால் மேற் கொள்ளப்பட்டதென்

(9-ம் பக்கம் பார்க்க)

## கொள்ளை முயற்சி தோல்வி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்குப் பகுதியிலுள்ள ஐந்து வீடுகளில் கொள்ளையிட முனைந்த இனந்தெரியாத நபர்களின் முயற்சி தோல்வியில் முடிந்தது.

காரிருளையும், கடும் மழையையும்சாதகமாக்கி கொண்ட இக்கொள்ளையர்கள்; நேற்று

(9-ம் பக்கம் பார்க்க)

### வண. சிங்கராயர் வழக்கு;
## 'அமிரி'ன் 'ரேப்' குறித்து நீதிமன்றில் கேள்வி

(கொழும்பு)

"முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கத்தின் உரை அடங்கிய "ரேப்" ஒன்று அமில உப்பகத்தில் இருந்து எடுக்கப்பட்டதாக எனக்கு ஞாபகம் இல்லை" என்று பொலிஸ் உத்தியோகத்தர் திரு. ஹிக்டன் பெரேரா வண பிதா ஆபரணம் சிங்கராயருக்கு எதிரான வழக்கில் நேற்று கொழும்பு மேல்நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்

இந்த வழக்கு அவசரகாலச் சட்டத்தின் கீழ் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நீதிபதி எச். டபிள்யூ சேனநாயக்கா முன்னிலையில் நடைபெற்றுவருகிறது.

எதிர் தரப்பில் ஆஜரான இரேஷ் சட்டத்தரணி பாலா தப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார்.

சாட்சி மேலும் கூறுகையில் யாழ். பொது நூலகம்

(9-ம் பக்கம் பார்க்க)

### வவனியாவில்——————
## நீர்ப்பாசன அலுவலகத்தில் கொள்ளை முறியடிப்பு

(வவனியா)

வவனியா நீர்ப்பாசனத் திணைக்களத்தில் தளபாடங்கள் கடத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி பொலிசார் தலையிட்டதன் பேரில் முறியடிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

வவனியா பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்திற்குள் புகுந்த இனந்தெரியாத கோஷ்டி அங்கிருந்த தட்டச்சுப் பொறிகள் மற்றும் தளபாடங்களை ஒருவாகனில் ஏற்றிக் கொண்டிருந்ததாகவும் அதற்குள் அருகாமையிலுள்ள பொலிசாருக்குத் தகவல் கிடைக்கவே அங்கிருந்து அவர்கள் கூட ஆரம்பித்தனராம். கொள்ளையில் ஈடுபட்டவர்கள் ஓடித்தப்பிவிட்டதாகக் கூறப்படுகின்றது.

## கல்லடிப் பகுதியில் நேற்று மாலை நடந்தது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்லடியில் நேற்று மாலை பொலிஸ் அதிரடிப்படையினருக்கும் தமிழ் தீவிரவாதிகளுக்கும் இடையே இடம்பெற்ற நேரடி மோதலில் இருதரப்பினருக்கும் எதுவித சேதமும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(9-ம் பக்கம் பார்க்க)

### மருத்துவபீட கட்டிடத் தகராறு:
## மருத்துவபீட மாணவர்கள் மறியல் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடக் கட்டிடம் கட்டி முடிக்கப்படாதது தொடர்பாக நேற்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தின் பின்னர், மருத்துவபீட மாணவர்கள் சில மணிநேரம் மறியல் போராட்டம் நடத்தினர்.

மருத்துவபீடக் கட்டிடம் கட்டிமுடிக்கப்படாதது குறித்து ஏற்கனவே மாணவர்கள் நிர்வாகத்துக்கு எடுத்துக்

(9-ம் பக்கம் பார்க்க)

## புதிய நகரம் நிர்மாணிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்றுக் காலை ஆயுதப்படையினர் நடத்து சென்று துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். கனகபுரம் பக்கமாக இடம்பெற்ற இச்சம்பவத்தில் கிளர் காய

(12ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் நேற்றிரவு ஏற்பட்ட பதற்றம்!
### பத்துப் பேர் விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ் நகருக்கு நேற்றிரவு திடீரென வந்த இராணுவத்தினரால் நகர் ஓரளவு பதற்றத்துக்குள்ளானது.

யாழ். கோட்டையிலிருந்து 'ட்றக்'குகளிலும் கவச வாகனங்களிலும் திடீரென பஸ் நிலையத்துக்கு இராணுவத்தினர் வரவே பஸ் நிலையத்திலும், கடைகளிலும் இருந்த மக்கள் பீதிகொண்டு நகரத் தொடங்கினர். செய்திபரவி நகரில் பதற்றம் ஏற்பட்டது.

சுமார் ஒரு மணிநேரம் வரை இராணுவத்தினர் பஸ் நிலையப்பகுதியில் மட்டும் ரோந்திலிருந்துவிட்டு இரவு எட்டு மணியளவில் கோட்டை திரும்பினர்.

மூன்று வெடிச்சத்தங்கள் கேட்ட போதிலும் அசம்பாவிதம் எதுவும் நிகழவில்லை. ஆனாலும் பத்துப்பேர் நேற்றிரவு இராணுவத்தினரால் விசாரணைக்காக கூட்டிச்செல்லப் பட்டனர்.

## அன்னை இந்திரா நினைவுதினம் மாலையில் சிறப்புக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அன்னை இ. மு. கழகத்தின் நினைவுக்குழுவினர் இந்திரா காந்தியின் முதலாண்டு நினைவு ர்த்த நினைத்தைபோட்டி இன்று மாலை யாழ். நகரில் சிறப்புக் கூட்டமொன்றை

(12ம் பக்கம் பார்க்க)

புண்ணிய பாரதத்தின்
பெருந் தலைவி

ஈழத்தமிழரின் இன்னல் தீர்த்திட
ஆக்கப் பணிபுரிந்த அன்னை இந்திராவுக்கு

**அஞ்சலிகள்**

**இந்திரா ஜுவல்லர்ஸ்,**
185 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்;

அசல் 22 கரட் தங்கத்தில் ஓடர்நகைகள்
குறித்த தவணையில் செய்துகொடுக்கப்படும்.
அழகிய வண்ண ரெடிமேட் நகைகளுக்கும்
உத்தரவாதம். (1486)

# சிறு விளம்பரம்

## தேவை

பொருட்களை வீடுகளுக்கும் கடைகளுக்கும் சைக்கிள் மூலம் எடுத்துச் சென்று விநியோகிப்பதற்கு யாழ். நகரிலுள்ள நிறுவன மொன்றுக்கு நம்பிக்கையான ஆட்கள் தேவைப்படுகின்றனர். எமக்கூடாக விண்ணப்பிக்கவும். M 27, Dyn Ads, 476, பிரதான வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். 1489

யாழ். நகரில் இருக்கும் ஆங்கில மருந்து விற்பனை நிலையத்துக்கு ஆங்கில மருந்து அனுபவமுள்ள பெண் விற்பனையாளர் உடனடியாகத் தேவை. தகுந்த ஆதாரத்துடன் உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல:-1510, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1510

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வைத்திய நிலையம் ஒன்றைப் பராமரிப்பதற்கு பதிவுசெய்யப்பட்ட வைத்திய அதிகாரி (R M P.) அல்லது சுதேச வைத்தியர் தேவை. தொடர்பு. விளம்பர இல: 1499 C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம். 1499

### பனம்பொருள் அபிவிருத்திச்சபை
### ஆட்கள் தேவை

பனந்தும்பு அல்லது தென்னம் பிறிஸ்ரல் தும்பிலிருந்து "பிரஷ்' (Brush) தயாரிப்பதில் அனுபவமும் தேர்ச்சியுமுள்ள ஆட்கள் உடனடியாகத் தேவை. 'பொதுமுகாமையாளர். பனம் பொருள் அபிவிருத்திச் சபை, வீடமைப்புச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம்," என்னும் முகவரிக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்
பனம்பொருள்
அபிவிருத்திச்சபை
1505

## விற்பனைக்கு

புதிய வீடு 3 படுக்கை அறைகள் ஹோல், குசினி, குளிப்பு அறைகள் மின்சாரம், பைப் வசதிகள் சுற்றுமதிலுடன் 1 பரப்பு 14 குழிகளில் 435 கஸ்தூரியார் வீதி, (கிங்ஸ் ஒழுங்கை) யாழ்ப்பாணம். 1478

மினி சினிமாவுக்கு உகந்த 5 x 5 அடி வீடியோ புரஜெக்ரர், 42 அங்குல T. V. என்பன விற்பனைக்குண்டு: மினி சென்ரர்.J.M C பில்டிங், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1481

## இலவசம்

சைவ சமய தீட்சை வைக்கும் கோயில்கள், தொண்டர் சபைகள், மன்றங்கள் 'நித்திய கரும விதி'யை இலவசமாக விண்ணப்பம் செய்து பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம். 1498

## வைத்தியம்

மூலவியாதிகள், வாதவியாதிகள், பீனிசம், எக்ஸிமா போன்ற சரும வியாதிகள், தொய்வு, கண் ரோகங்கள், நரம்புத் தளர்ச்சி, மாதவிடாய்க்கால உபத்திரவங்கள், குழந்தைப்பேறின்மை, குழந்தைகள் சம்பந்தமான வியாதிகளுக்கும், நீரிழிவு ரோகத்திற்கும் சித்த ஆயுர்வேத வைத்திய முறைப்படி சிகிச்சை பெறலாம். டாக்டர் மகேஸ்வராம்பிகை D. A. M., கலைவாணி வைத்தியசாலை, (பண்டாரக்குளம் பிள்ளையார் கோவிலடி). 41/5, அரசவீதி, நல்லூர். 1129

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## அமரர் க. இளையதம்பி

காரைநகர் பகுதியில் தோன்றிய சமூக சிறந்த தூதராகத் திகழ்ந்து இரண்டாண்டுகளுக்குமுன் மறைந்தவர் திரு. க. இளையதம்பி, தமது அயராத உழைப்பினாலும் ஆர்வமான பேச்சினாலும் தன்னலம் மறந்த செயற்பாடுகளினாலும் சர்வசன ரஞ்சகமான கட்டுரை விளம்பரங்களாலும் ஈழத்தில் எல்லா மட்டங்களிலுமுள்ள எல்லாத் தரத்தினரையும் ஒருமுகமாக இணைத்திருந்தி ஒன்றுபடுத்தி சைவ அன்பர்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவு இந் நிலையங்களில் சிறப்பதற்குப் போதிய ஸ்திரமான ஏதுசாதனங்களை நிறுவி வைத்தவர். அவரது தனித்துவமான நாவலர் பக்தியின் மேன்மையையும் தளரா ஊக்கப் பெருமையையும் பிரதிபலித்துக்கொண்டு இங்கு விளங்கும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் இல்லமும், நாவலர் கலாசார நிலையமும் ஈழத்தமிழர்க்கான இலட்சியப் படைப்புகள் அவர் அபிலாஷைகளுள், ஐந்தாண்டுத் திட்டம் என்ற சைவத்தமிழ்க் கல்விப் பயிற்சித் திட்டம்' ஈழத்துச் சைவவிருத்திக்கு மிக இன்றியமையாதது. நாவலர் பெருமான் காட்டிய தமிழ், சைவ, சமூகப் பணிகளும் நடைமுறையில் தொடர்ந்து கொண்டிருக்கும் என்பது இளையதம்பியின் அபிலாஷை. அது நிறைவேறுமுன் அவர் மறைந்துவிட்டமை நாவலர் சபை அபிமானிகளுக்கு பேரதிர்ச்சியாயிற்று. அவர் இறுதி அபிலாஷையை நிறைவேற்றி வைத்தல் புண்ணிய கைங்கரியமாகும். அவரது நினைவுதினம் நேற்றாகும்.

—ஓர் அன்பர்.

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில்
### பின்னுறுதிக் கட்டளை
பற்றிய
### அறிவித்தல்

சொத்துரிமை விடயம் காலஞ்சென்ற காரைநகர் மேற்கு, தங்கோடை, காசிநாதர் சண்முகம்பிள்ளையின் மரணச் சொத்துக்களின் விடயத் தொடர்பில்.

— காலஞ்சென்றவர்
சண்முகம்பிள்ளை காசிப்பிள்ளை,
காரைநகர் மேற்கு,
தங்கோடை,

— மனுதாரர்.
வழக்கு இல: தத்துவம் / 97
எதிர்

1. காரைநகர் மேற்கு, தங்கோடை நாகமுத்து கார்த்திகேசு கைம்பெண் கமலாட்சி.
2. காரைநகர் மேற்கு, வேலுப்பிள்ளை நமசிவாயம் கைம்பெண் விசாலாட்சி.

— எதிர்மனுதாரர்கள்

மேலே கண்ட இலக்கம் கொண்ட மரணச் சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட காலஞ் சென்றவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டுள்ளதில் அதற்கிணங்கி பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 6-ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோற்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்கள்.

1985-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 11-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
க. பொன்னம்பலம்,
பதில் பதிவாளர்

வரைவு:
எஸ். ஏ. ஈ. ஏகநாதன்,
மனுதாரரின் சட்டத்தரணி.
1495

## 31-ம் நாள் நினைவஞ்சலி

வல்வெட்டித்துறை
### ரவீந்திரராஜா பார்வதிஅம்மன்



மலர்வு:
21-05-1961

உதிர்வு:
01-10-1985

திதி:
31-10-1985

எங்கள் நெஞ்சமெல்லாம் அணையாச்சுடர்ஒளியாய் பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் சிகரமாய் எல்லோர் நன்மதிப்பையும் பெற்று எங்கள் குலதீபமாய் விளங்கி நாமனைவரும் பெருந்துயரில் வாடும்படி எம்மை விட்டுத் திடீரென மறைந்த எங்கள் குஞ்சம்மாவே உங்கள் ஆத்மா சாந்தி அடைய நாமனைவரும் ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
உற்றார், உறவினர்கள்.
வெவுர வீதி, வல்வெட்டித்துறை. (1432)

## ஆதரவு தாரீர்!

சங்கிலியன் புனர்வாழ்வுக் கழக அகதிகளின் தயாரிப்புக்களான

* மரவள்ளிப் பொரியல்
* மிக்ஷர் * கடலைப் பருப்பு

போன்ற உணவு வகைகளை வாங்கி அவர்களின் முயற்சிக்கு ஆதரவு அளியுங்கள்.
ஆதரவிற்கு நன்றி

**சங்கிலியன் புனர்வாழ்வுக் கழகம்**
பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(1504)

## எமது புதிய வெளியீடுகள்

1. கரையைத் தொடாத அலைகள் — அருள், இளவரசி, கவுண்டமணி (Pyramid)
2. அம்மாவும் நீயே அப்பாவும் நீயே — ராஜேஸ், சரிதா, விசு (Pyramid)
3. மருதானி (V. G. P.) — பாண்டியன், சோபனா

**நல்லூர் வீடியோ சென்ரர்**
முத்திரைச்சந்தை, நல்லூர்.
(1507)

## சோவியத் புத்தகங்களின் கண்காட்சியும், விற்பனையும்

இடம்: மாவட்ட அபிவிருத்திச்சபை உப-அலுவலக மண்டபம், மானிப்பாய்.
காலம்: 01-11-1985 வெள்ளிக்கிழமை
02-11-1985 சனிக்கிழமை
நேரம்: வெள்ளி காலை 10-00 — மாலை 6-00
சனி காலை 9-00 — மாலை 5-00
தலைவர்: திரு. க முத்துவேற்பிள்ளை (முன்னாள் அதிபர், மானிப்பாய் இந்துக்கல்லூரி.)

அவர்கள் மங்கல விளக்கேற்றி விற்பனையை ஆரம்பித்து வைப்பார்கள்

* சிறுவர் நூல்கள்
* சோவியத்நாட்டு இலக்கியங்கள்
* புனைகதைகள்

மற்றும்

* விஞ்ஞானம் * தொழில் நுட்பம்
* கணிதம் * அரசியல்

போன்ற பல்வேறுதுறை சார்ந்த நூல்கள் படிக்கவும், பரிசளிக்கவும், சேமிக்கவும் உகந்தவை.

சமீபத்தில் வெளிவந்த புத்தகங்களும் இடம்பெறும்.

மிகக்குறைந்த விலையில் விற்பனை செய்யப்படும்.

**மக்கள் பிரசுராலயம்,**
40, சிவன்கோவில் வடக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

## OBITUARY

At Rest with Jesus

### SEGARAJASINGHE

Segarajasinghe Ariam Benito Retired Officer, Peoples Bank, Jaffna Beloved father of Kanna and Ramesh, loving son of the late Mr J C. Segarajasinghe and Mrs. Chellam Segarajasinghe, dear brother of Jeiam, Jeevam, Ranchitham, Indran, Geetham, Mathuram Bavanitham, Easwaram and Nimalam, brother-in-law of Juliet, Thilaga, H M. Ernest, Rita, E. R Joseph, R F Thambinayagam, W. J. Xavier, Charmaine and V. Jeganathan, Remains will be removed for interment at St Mary's burial grounds, Jaffna on Thursday 31st October. Cortege leaving 57, Vembadi Road, at 3-30 p. m 1500

● சீனாவில் கூடுதல் சுதந்திரம்————

# ஜனநாயக உரிமைகள் வேண்டி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்!

பீக்கிங், அக்-30

அதிகளவிலான ஜனநாயக உரிமைகளையும், கூடுதல் சுதந்திரங்களையும் வேண்டி சுமார் ஆயிரம் சீன மாணவர்கள் பீக்கிங்கில் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தினர். இந்த ஊர்வலம் பீக்கிங்கிலுள்ள சீன அரசாங்கத்தின் மத்திய காரியாலயம் முன்பாக நடத்தப்பட்டது.

இரு வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இந்த ஊர்வலம் குறித்து நேற்று முன்தினமே உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்திய மாணவர்கள் சீனாவின் பல பாகங்களையும் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. சீன அரசுக்கு இந்த ஊர்வலம் பெரும் தலையிடியைக் கொடுத்திருந்தது.

மாணவர்கள் இவ்வூர்வலத்தின்போது சிறு சிறு விஷமத்தனங்களிலும் ஈடுபட்டனர். ஆயினும் பொலிசார் அவர்கள் மீது குறுக்கீடுகள் எதனையும் மேற்கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. மாணவர்கள் மீது கைவைக்கும்பட்சத்தில் பாரதூரமான விளைவுகள் ஏற்படுமென்ற காரணத்தினாலேயே அவர்கள் அவ்வாறு செய்யவில்லையெனவும் கூறப்பட்டது.

சீனாவில் கூடுதல் சுதந்திரங்கள் வழங்கப்பட்டு, ஜனநாயக உரிமைகளும் அதிகளவில் மக்களுக்கு வழங்கப்படவேண்டுமென ஊர்வலத்தில் சென்ற மாணவர்கள் கோஷமெழுப்பினர்.

சீனாவில் இடம்பெற்ற கலாசாரப் புரட்சியை அடுத்து கல்வி, கலாசார, சமூகவியல் துறைகளில் பெருமளவு மாற்றங்களும், கட்டுப்பாடுகளும் கொண்டுவரப்பட்டன.

ஆனால் சீனாவின் தற்போதைய அரசாங்கம் இக்கட்டுப்பாடுகளில் சிலவற்றைத் தளர்த்தி வருகின்றது. அத்துடன் மேற்கத்தேய பாணியில் பல நடைமுறைகளையும் புகுத்தி வருகின்றது.

எனவே இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியே சீன மாணவர்கள் மேலும் அதிக அளவு சுதந்திரங்களைச் சீன அரசிடம் வேண்டிவருகின்றனர்.

இவர்கள் தமது ஆர்ப்பாட்டத்தின்போது ஜப்பானுக்கு எதிராகவும் கோஷமெழுப்பினர். ஜப்பான் சீனாவில் பொருளாதார ரீதியாகக் கூடுதல் செல்வாக்குப்பெற முயலுகின்றது என அவர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

(இ)

உலகச் செய்திகள்

## அரசாங்க அதிபர் நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் அண்மைக்காலங்களில் நடைபெற்று வரும் கொலைச் சம்பவங்களைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை மட்டக்களப்பு அரசாங்க அதிபர் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கான் அரசின்————

## ஐ. நா. பிரதிநிதித்துவத்தை நீக்கும்படி வேண்டுகோள்!

நியுயோர்க், அக்.30

சோவியத் சார்பு ஆப்கானிஸ்தான் அரசாங்கத்தை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திலிருந்து நீக்குமாறு ஆப்கானிஸ்தான் கிளர்ச்சியாளர்கள் கூட்டுமுன்னணி கேட்டுள்ளது.

சோவியத்சார்பு ஆப்கானிஸ்தான் அரசுக்கு எதிராகப் போராடிவரும் கிளர்ச்சிக் குழுக்களை உள்ளடக்கிய கூட்டுமுன்னணியொன்று தற்போது நியுயோர்க்கில் தங்கியுள்ளது.

ஏழு கிளர்ச்சிக் குழுக்கள் இம்முன்னணியில் அங்கம் வகிக்கின்றன.

ஐ. நா. வின் 40 வது கூட்டத்தொடரில் ஆப்கான் விவகாரத்துக்கு கூடுதல் முக்கியமளிக்கச் செய்வதே இக்குழுவின் நோக்கமாகும்.

இக்குழுவினர் நேற்று நியுயோர்க்கில் நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

(11-ம் பக்கம் பார்க்க)

## பீகார் உபவேந்தர்கள் இராஜினமா!

(புதுடில்லி)

பீகார் மாநிலத்திலுள்ள ஐந்துப் பல்கலைக்கழகங்களினதும் உபவேந்தர்கள் தமது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளனர்.

இம்மாநிலப் பல்கலைக்கழகங்களின் கல்வி, நிர்வாக நடவடிக்கைகளில் சீர்திருத்தம் கொண்டுவரும் வகையிலேயே அவர்கள் இவ்வாறு செய்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பீகார் மாநில பல்கலைக்கழகங்களின் வேந்தர் திரு. வேங்கட சுப்பையாவிற்கு நிர்வாகத்தில் கூடுதல் சுதந்திரம் வழங்கப்பட வேண்டுமென அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். அத்துடன் கல்வி, நிர்வாகத்துறைகளில் விரிவான மாற்றங்களும், சீரமைப்புகளும் செய்யப்படவேண்டுமென அவர்கள் கேட்டுள்ளனர்.

இந்த இராஜினாமாக்கள் ஜனாதிபதி ஜெயில்சிங்கின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. (இ)

## “எம். ஜி. ஆர். ராஜினமா செய்யமாட்டார்!” – நெடுஞ்செழியன் அறிவிப்பு

சென்னை, அக்-30

“தமிழகமுதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் தமது பதவியை ராஜினாமாச் செய்ய மாட்டார்” என்று தமிழக நிதி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அறிவித்துள்ளார்.

திரு ராமச்சந்திரன் தனது பதவியை ராஜினாமாச்செய்யப் போவதாக நேற்று முன்தினம் அறிவித்திருந்தார். இதனை அடுத்து தமிழகத்தில் பெரும் பதட்டமும், மக்களிடையே ஒருவித சஞ்சலமும் காணப்பட்டது.

சிலர் தீக்குளிப்பு, ரயில் முன் பாய்தல் போன்ற தற்கொலை முயற்சிகளிலும் ஈடுபட முயற்சித்தனர். வேறு சிலர் எம். ஜி. ஆருக்கு எதிரான சக்திகள்மீது தாக்குதல் நடத்தவும் முயற்சித்தனர் என்று தெரியவருகின்றது.

எனவே இக்குழப்பமான நிலைமைகளைத் தவிர்க்கும் விதத்திலேயே திரு. நெடுஞ்செழியன் மேற்கண்டவாறு அறிவித்துள்ளார். அவர் மேலும், “முதலமைச்சர் எம். ஜி. ஆர். பதவியைராஜினாமாச் செய்யமாட்டார். அவர் தொடர்ந்து பதவியிலிருப்பார். எனவே மக்கள் பதட்டமடையத் தேவையில்லை, தீக்குளிப்புப் போன்ற தற்கொலை முயற்சிகளையோ அல்லது வேறு வன்முறைகளையோ மேற்கொள்ள வேண்டாம்” என்று கேட்டுக் கொண்டார்.

தமிழக அமைச்சர்களும் திரு. எம். ஜி ஆரிடம் தனித்தனியாகச் சென்று அவரைத் தொடர்ந்து பதவியிலிருக்கும்படி கேட்டுக்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. முதலமைச்சர் தொடர்ந்து பதவியிலிருக்கும்வகையில் தமது பூசல்களைக் கைவிடுவதாகவும் அவர்கள் கூறியிருப்பது தெரியவந்துள்ளது. (இ)

## ஜே.ஆர்., பெரஸ் சந்திப்பு குறித்து சிவா அச்சம்!

(சென்னை)

“இலங்கை ஜனாதிபதி திரு: ஜே. ஆர். ஜெயவர்த்தனா, இஸ்ரேலியப் பிரதமர் திரு. ஷிமோன் பெரஸ் ஆகியோரின் சந்திப்பு மிகவும் ஆபத்தான தொன்றாகும்” என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு மு. சிவசிதம்பரம் அச்சந் தெரிவித்துள்ளார்.

திரு சிவசிதம்பரம் அத்தலைவர்கள் இருவரும் பாரிஸில் சந்தித்திருப்பதுகுறித்து அறிக்கை வெளியிட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு: சிவசிதம்பரம் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

“இலங்கைப் பாதுகாப்புப் படைகள் இஸ்ரேலிய ‘மொஸாட்’ புலனாய்வுப் பிரிவினரின் பாணியிலேயே இலங்கையில் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றன.

கிராமங்களைச் சுற்றி வளைப்பது, வீடுகளை எரிப்பது, இளைஞர்களைக் கைது செய்வது, திடீர் திடீரெனப் புகுந்து தாக்குதல்களை மேற்கொள்வது போன்றனவெல்லாம் மொஸாட் இலங்கைப் படைகளுக்கு அளித்தபோதனைகளே.

மத்திய கிழக்கில் இஸ்ரேலியப் படைகள் செய்யும் இராணுவ நடவடிக்கைகள் அனைத்தும் இலங்கையின் தமிழ்ப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இந்நிலையில் இஸ்ரேலியப் பிரதமரை இலங்கை ஜனாதிபதி சந்தித்திருப்பது இலங்கைத் தமிழர்களுக்கு மேலும் அச்சுறுத்தலளிக்கும் ஒரு நிகழ்ச்சியாக உள்ளது” என்றார்.

## அகதிகளுக்கு உதவி

(சாவகச்சேரி)

மறவன்புலவில் குடியமர்த்தப்பட்டுள்ள 40 அகதிக் குடும்பங்களுக்கும் அறவழிப் போராட்டக்குழு தலா இரண்டு பரப்பு காணி பயிர்ச் செய்கைக்கு என அன்பளிப்புச் செய்யவுள்ளது. இவர்களுக்கு வழங்கப்படவுள்ள காணியை அறவழிப்போராட்டக் குழு, சில மாதங்களுக்கு முன்னர் கொள்வனவு செய்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பம்பாயில் டாக்ஸி சாரதிகள் கலகம்!

(பம்பாய்)

தெற்கு பம்பாயில் டாக்ஸி சாரதிகள் பொலிஸாருக்கு எதிராக நேற்று வன்முறைகளில் இறங்கினர். இதனால் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகத்திலும் ஈடுபட்டனர் என்று கூறப்பட்டது.

மோட்டார் வாகனப்பிரிவு பொலிஸார் டாக்ஸி சாரதிகளை அச்சுறுத்தி, தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தே அந்த டாக்ஸி சாரதிகள் வன்முறைகளில் இறங்கினர்.

பொலிஸார்மீது கற்களை வீசியும், பொலிஸ் வாகனங்களைத் தாக்கியும் அவர்கள் கலாட்டா செய்தனர். ஆரம்பத்தில் கலகக்காரர்களைக் கலைக்க பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர். நிலைமை கட்டுமீறவே துப்பாக்கிப்பிரயோகம் நடத்தப்பட்டது. ஆயினும் எதுவித சேதங்களும் ஏற்படவில்லை என அறிவிக்கப்பட்டது. (இ)

## ‘எய்ட்ஸ்’ வியாதிக்கு சிகிச்சை கண்டுபிடிப்பு!

(பாரிஸ்)

உலகையே அச்சுறுத்திவரும் ‘எய்ட்ஸ்’ வியாதிக்கு சிகிச்சை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பிரெஞ்சு வைத்தியக் குழுவொன்று அறிவித்துள்ளது.

புற்றுநோயைவிடப் பயங்கரமானதாக இந்நோய் கருதப்படுகிறது. உடலிலுள்ள நோய் எதிர்ப்புச் சக்தியை இழக்கச் செய்து நோயாளியைச் சாகடிக்கும் தன்மை கொண்டதாக இது காணப்படுகிறது.

‘சைக்ளோஸ்போரின்—எ’ என்ற மருந்தே ‘எய்ட்ஸ்’ நோய் சிகிச்சைக்கெனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது உடல் உறுப்புமாற்று சத்திரசிகிச்சைகளுக்குப்பின் வழங்கப்படுவதாகும்.

இம்மருந்து உடலிலுள்ள குருதிக் கலங்களினுள் செலுத்தப்படும்பட்சத்தில் எய்ட்ஸ் நோய்க்கிருமிகள் அழிந்துவிடுகின்றனவென்று தெரிவிக்கப்பட்டது.

இதனைக் கண்டுபிடித்த பிரெஞ்சுக்குழு ‘எய்ட்ஸ்’ நோயாளிகள் பலரை சிகிச்சையளிக்கவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

### மணிவாக்கு

கல்வியறிவுடையவன் ஒருவன் ஒன்றைப்பற்றி எல்லாமும், எல்லாவற்றையும் பற்றி ஏதும் அறிந்திருக்க வேண்டும்.

— எமர்சன்

# நமது நோக்கு

## சமூக தருமம் முன்னேறுகிறது

சுதந்திர இந்தியாவில் வறுமையை ஒழிப்பதே முதற் பொறுப்பாக இருந்தது. அது இன்றும் தொடர்கிறது.

பசியால் வாடுபவனுக்கு உணவே தெய்வம் என்றும், தெய்வத்துக்கு தரித்திர நாராயணன் ஒரு தகுந்த பெயரென்றும் காந்திமகாத்மா அடிக்கடி சொல்லி வந்தார்.

இந்தியாவின் முதற் பிரதமரான ஜவஹர்லால் நேரு வறுமையை ஒழிப்பதில் வெற்றிகண்ட கம்யூனிஸ ரஷ்யாவின் பேரபிமானியாக இருந்தார்.

அவருடைய ரஷ்ய விஜயம், இந்திராவின் விஜயம் போல் உலகப் பிரசித்தி பெற்ற நிகழ்ச்சிகள். மாஸ்கோ இந்திய சுதந்திரத்தையோ, மகாத்மா காந்தியையோ, நேருவையோ பெரிதும் பாராட்டவில்லை.

மகாத்மா இறந்தபோது ஒரு இந்தியத் தலைவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று மாஸ்கோ அறிவித்தது.

இந்தியா ஒரு ஆங்கில ஏகாதிபத்திய நாடென்றும், அந்த மரபில் எழுந்த தலைமைத்துவம், சுதந்திரத்தில் கை மாறப்பட்டிருக்கிறது என்பது அன்றைய ரஷ்யாவின் கொள்கை.

அது தவறென்று சொல்ல முடியாது. அறுபது கோடி மக்களின் வறுமையை கம்யூனிஸ்ட் நடைமுறைகளினால் போக்க முடியாதென்பதை நேரு தானாகவே முடிவுகட்டினார்.

தமது ஆன்மீகக் குருவும் அரசியல் வழிகாட்டியுமான காந்தியின் கருத்தும் அவ்வாறே என்பது அவருக்குக் கொள்கை உறுதியளித்தது.

காஷ்மீர் பிராமண குடும்பத்தில் பிறந்த மோதிலால் நேரு இந்தியாவிலுமே புகழ்பெற்ற பாரிஸ்டர். செல்வத்தில் திளைத்து வாழ்ந்தவர்.

மகாத்மா காந்தியின் சுதந்திர இயக்கத்தில் சேர்ந்த மிதவாதி. அவர் தம்முடைய செல்வங்களைத்தையும் காங்கிரசுக்கு அர்ப்பணித்தவர்.

மகன் நேருவின் தீவிரம், மோதிலால் இறக்கு முன் அவரையும் தொற்றியது.

வறியவருக்கும் உதவும் சகல குடும்பத்தின் பிறவிச் சொத்து. வறுமையை ஒழித்து ஒரு சமத்துவ சமுதாயம் அமைப்பதற்கு இக்குடும்பத்தின் முதல் நடவடிக்கை "பண்டிற்" (பிராமணன்) என்ற குலப் பெயரை ஒழித்ததே.

மிஸ்டர் நேரு, ஜனநாயக நாட்டுப் பிரஜை என்று ஆரம்பமாய் மக்கள் அனைவரும் சரிநிகர் சமானமானவர்கள் என்ற அடிப்படைக் கொள்கை சுதந்திர இந்தியாவின் அச்சாணி. இன்றும் கட்டிமுடியாத தேர் அழகில் அதிகரித்து வருவது கண்டு

இன்றும் இந்திய சமுதாயத்தில் மேடும் பள்ளமும் இல்லாது போய்விடவில்லை. அருள் தேசத்தில் ஏன் இந்த வறுமை. ஒருவன் கஷ்டப்படுவது, ஒருவன் சுகமாக இருப்பது? இதெல்லாம் ஆண்டவன் வேலையோ தலைவிதியோ அல்ல என்பதே பிரதமர் நேருவின் ஆட்சி நிலைநாட்டிய சாதனை.

இது இலேசான சாதனையா? தெய்வத்தில் பழிபோடும் பரந்த இந்த சமுதாயம், தமக்கள் முயற்சியால் வறுமையை முறியடிக்கலாம் என்ற நம்பிக்கைகொள்வது ஒரு அற்புத மாற்றம். அதற்கு வித்திட்டவர் மகாத்மா.

இத்தகைய மாற்றத்தை தருமத்தின் பெயரால், எவ்வித ரத்தக்களரியுமின்றி ஏற்படுத்தியதே நேருவின் முடிவடையாத பயணம் எனலாம்.

ஐந்தாண்டு போன்ற பாரிய திட்டங்களும், தனியார் துறையில் மக்கள்நலன் தன்மைப் பங்கு வகிப்பதும் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது. நிர்வாகத்தில் பிரபலம் பெற்றது.

உலகின் மதிப்பு அவருடைய ஆட்சிக்கும் கிட்டிய போது இந்தியாவின் சோஷலிசக் கொள்கை தனித்துவம் பெற்றது.

உள்நாட்டில், முதலாளி வர்க்கம் அவரைக் கம்யூனிஸ்ட் என்றும், செல்வத்தைப் பகிராது வறுமையை வளர்க்கிறார் என்றும் வசை பாடினது. இடதுசாரிகள்- குறிப்பாகக் கம்யூனிஸ்ட்டுகள் அவர் ஒரு முதலாளித்துவக் கூட்டத்தினரென்றும் கண்டித்தனர்.

இந்த நிலை இந்திராவின் ஆட்சியில் இன்னும் அதிகரித்தது. இந்திராவின் ஆட்சியில் பல குறைகள் இருந்த போதும் மக்களின் வறுமை நீங்க எடுத்த வீர நடவடிக்கைகள் இன்று பொதுமக்கள் வாழ்வில் நன்கு பரிணமிக்கிறது.

வறுமை ஒழிப்பு நீண்ட பயணமாக இருக்குமா? பாரதத்தின் மரபின் தொடர்பும் அதே சமயம் வேண்டிய மாற்றமும் என்ற இரு துறைகளில் புதிய பிரதமர் தொடர்வது உலகுக்கே பேரதிர்ச்சியாக இருக்கிறது.

## வவுனியா மாவட்டத்தில் உணவு போஷாக்கு வாரம்

(வவுனியா)

உணவு போஷாக்குவாரத்தை யொட்டி வவுனியா மாவட்டத்தில் ஐந்து கருத்தரங்குகளை நடத்த வவுனியா திட்டமிடல் பிரிவினர் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

எதிர்வரும் 4ம் திகதி செட்டிகுளம் தமிழ்பிரிவு, 5ம் திகதி நெடுங்கேணி 6ம் திகதி செட்டிகுளம் 7ம் திகதி சிங்கள பிரிவு ஆகிய இடங்களில் நடைபெறும். 8ம் திகதி வவுனியாக் கச்சேரியில் மாவட்டக் கருத்தரங்கு இடம்பெறும் என்று திட்டமிடல் அதிகாரி திரு. ரி. அரைக்கம் தெரிவித்தார்.

உணவுபோஷாக்கின் முக்கியத்துவத்தை விளக்கும் வகையில் மேற்படி கருத்தரங்கு நடைபெறுவதாக சம்பந்தப்பட்டவட்டாரங்கள் தெரிவித்தன.

கிராமோதய சபைத் தலைவர்கள், கிராம சேவையாளர்கள், விசேட சேவை அலுவலர்கள் மற்றும் வெளிக்கள அலுவலர்கள் இக்கருத்தரங்கிற்கு அழைக்கப்படவுள்ளனர். மாவட்டமட்டத்தில் நடைபெறும் கருத்தரங்கிற்கு வவுனியாவில் உள்ள சகல திணைக்கள அதிகாரிகளும் அழைக்கப்பட்டுள்ளனர்.

## இசை, நடன, நாடகப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான இசை, நடன, நாடகப் போட்டிகள் இன்று யாழ். இந்து மகளிர் பாடசாலையில் நடைபெறும்.

வட்டார ரீதியில் மேற்படி போட்டிகளில் பங்குபற்றி முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட பாடசாலைகள் இப்போட்டியில் பங்குபற்றுகின்றன. இப்போட்டிகள் நேற்று ஆரம்பமானது. (ஐ)

### வீரசிங்க மண்டப கட்டடம் சேதம்

## நிவாரணம் கோரி கண்காணிப்புக்குழுவுக்குபுகார்

(யாழ்ப்பாணம்)

யாழ். வீரசிங்கம் மண்டபம் குண்டுத்தாக்குதலில் சேதமடைந்தது பற்றி கண்காணிப்புக்குழு உறுப்பினர் பேராசிரியர் கா. சிவத்தம்பிக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவு சபை கிளைத்தலைவர் திரு கி. சிவமகாராசா, பேராசிரியர் சிவத்தம்பிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்ட விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது:

"இம்மாதம் 24ம் தேதி இரவு 11-30 மணியளவில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் எமது கட்டிடத்தின் நான்காவது மாடி பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. இக் கட்டிடத்தில் காவலாளர் மட்டும் இருந்தார். வேறு எவரும் கட்டிட வளவிற்குள் பிரவேசிக்கவில்லை. இக்கட்டிடத்தின் பாதுகாப்புக் காரணமாக ஏற்றப்பட்ட மின்விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன.

கூட்டுறவாளர்களுக்குச் சொந்தமான இக் கட்டிடத்திற்கு சேதம் ஏற்பட்டுள்ளது. மிகக் கவலைக்குரிய விடயம். இக்கட்டிடத்தில் கூட்டுறவு இளைஞர் அருமானவரி இளைஞர், தொழில் கற்றோர், நெசவாளர்களைப்படுத்தும் சபை ஆகியன இயங்கி வருகின்றன. இக்கட்டிடத்திற்கு ஏற்பட்டுள்ள சேதங்களுக்கு நிவாரணம் தேடித்தருவதுடன், எதிர்காலத்தில் இக் கட்டிடத்தில் பாதிப்பு ஏற்படாவண்ணம் பாதுகாப்புத் தேடித்தரும்படியும் கேட்டுக்கொள்ளுகின்றோம்."

யாழ். அரச அதிபர் திரு. மு. பஞ்சலிங்கத்திடம் இது குறித்து கவலை தெரிவித்த திரு. கி. சிவமகாராசா, அரச அதிபரை அழைத்துச்சென்று சேதமடைந்த யாழ் வீரசிங்க மண்டபக் கட்டிடத்தைக் காண்பித்தார்.

### எம்மிதயத்தொளிரும் தாய்!

வித்தையோ என்றே வியக்க
வறுமையை ஒழிக்கும் திட்டம்
இத்தரை ஒருமைப் பாட்டில்
செலுத்திடும் வழியில் நீ தான்
இந்திய இரத்தம் சொல்லும்
"சமத்துவம் சகத்தில் தோன்றும்"
இந்தியத் தாயாய் எங்கள்
இதயத்தில் ஒளிர் கின்றீரே!

—ப மகேந்திரதாசன்
நாயன்மார்கட்டு.

### விடியலுக்குக் காத்திருக்கும் வேளை....

அடிமை விலங்குடைத்து
அடக்குமுறைக் கனைத்திவ்து
விடியலுக்காய் ஏங்குகின்ற
வீரருக்குள் குரல் தந்து
சங்கு முழங்க வெற்றிச்
சரித்திரம் எழுதும் நாளை
இங்குநீ படைப்பாய் என்று
இறுமாந்து நாம் இருக்க
எங்குற்றுப் பாவன் உன்னை
ஏன் கவர்ந்தான் எம்தாயே!

வீரத் திருமகள் நீ
வீழ்ந்ததினுல் இங்கு புதுத்
தேரோட வீதி இன்றித்
தவிக்கின்றோம் விதி எண்ணி
பாருக்கோர் பெருமகளாய்
பாரதத்து இந்திராவைப்
ஊருக்காய் வாழ்ந்த உன்
உதிரம் எமைக் காக்கும்!

—நெடுந்தீவு லக்ஷ்மன்

### புன்னாலைக்கட்டுவனில் விழிப்புக்குழு

(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலத்தில் நடைபெற்றுவரும் தனிநபர் கொலை, கொள்ளைகளைத் தொடர்ந்து புன்னாலைக்கட்டுவன் ஊர் மக்கள் விழிப்புக் குழு ஒன்றை அமைத்து இரவு நேரங்களில் சந்திகளிலும் முக்கிய இடங்களிலும் காவல் புரிந்தும் சோதனையிட்டும் வருகின்றனர். இந்நடவடிக்கையின் பின்னர் அப்பகுதியில் கொள்ளைச் சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லையென தெரிவிக்கப்படுகிறது. (ச)



மாலை
5:00 செய்திகள்
5-05 கார்ட்டூன் சித்திரம்
5-30 சிங்கள கார்ட்டூன் நிகழ்ச்சி
6-00 விலங்குகள் பற்றிய சித்திரம்
6-30 செய்திகள் (தமிழ்)
6-55 வலைப்பந்தாட்ட நிகழ்ச்சி
7-30
8-00 செய்திகள் (சிங்களம்)
8-25 நாடகம்
9-00 செய்திகள் ஆங்கிலம்)
9-20 தம்பதியும் தொடர் நவீனம்
9-50 அபிவிருத்தி நிகழ்ச்சி
10-30 "உலகத்தில் யுத்தங்கள்"
10-30 பாகிஸ்தான்-இலங்கை கிரிக்கெட்
10-30 ஒளிபரப்பு முடிவு

### அகதிகளைச் சந்தித்தார்

(யாழ்ப்பாணம்)

காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. ப. நெடுமாறன் தனது யாழ்ப்பாண விஜயத்தின் போது யாழ்ப்பாணத்தில் உள்ள இடம்பெயர்ந்த மக்களைப் பராமரிக்கும் நிலையங்களுக்கு விஜயம் செய்து அம்மக்களுடன் உரையாடி, அவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்களைத் தெரிந்து கொண்டதுடன், அம் மக்களுக்கு ஆறுதல் வார்த்தைகளையும் கூறினார்.

இந்த நிலையங்களை நடத்தும் ஸ்தாபனத்தவர்களையும் தொண்டர்களையும் அவர்களது சமூக சேவைக்காகப் பெரிதும் பாராட்டினார். (ஐ)

### பாதிக்கப்பட்ட மீனவருக்கு கடனுதவி

(மாவிட்டபுரம்)

கடல்வலயம் மூலம் பாதிக்கப்பட்ட மயிலிட்டி பகுதி மீனவர்களுக்கு உதவுவதற்கு யாழ் மறை மாவட்ட கனித முன்னேற்றச்சங்கம் முன் வந்துள்ளது.

பாதிக்கப்பட்ட மீனவர்கள் மீண்டும் தம் தொழிலை ஆரம்பிக்கும் வகையில் அவர்களுக்கு கடன் அடிப்படையில் பணம் வழங்குவதற்காக மேற்படி நிறுவனம் மயிலிட்டி காணிக்கை மாதா கோவிலில் நேர்முகப்பரீட்சை ஒன்றை நடாத்தியது. இதற்கிணங்க 17 மீனவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாவை வட்டியில்லாக் கடனாக வழங்கப்படவிருக்கிறது.

### தொண்டர்களுக்கு அறிமுக அட்டை

(யாழ்ப்பாணம்)

சங்கிலியன் புனர் வாழ்வுக் கழகம் நடத்தும் இடம் பெயர்ந்தோர் பராமரிப்பு நிலையத்தில் கடமைபுரியும் சகல தொண்டர்களுக்கும் அவர்களது புகைப்படப் பிரதிகளுடன் கூடிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

பராமரிப்பு நிலையத்துக்கு அன்பளிப்புக்களைச் செய்யும் பொதுமக்கள், இவர்களை இனங்கண்டு கொள்ள வசதியாகவே இவ்வாறு அடையாள அட்டைகள் வழங்கப் பட்டுள்ளதாக முகாம் பொறுப்பாளர் டாக்டர் ப. சிதரன் தெரிவிக்கிறார். (ஐ)

**அன்னை இந்திரா நினைவு சிறப்புமலர்**

# இந்தியா மீது இந்திரா
# கொண்டிருந்த காதல்



இந்திரா பிரதமராக இருந்த ஒரு இக்கட்டான காலத்தில் பின்வருமாறு கூறினார். ''நான் செய்யவேண்டிய வேலை ஒன்று இருக்கிறது. அதை நான் எனக்கு என்ன நேர்ந்தாலும் செய்து முடிப்பேன்.'' இக்கொள்கை ஈற்றில் அவரது உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்தியது.

இந்திரா காந்தியை நன்கு அறியாதோர்தான் சீக்கியரின் பொற்கோவிலுக்கு படையை அனுப்பினால் ஏற்படக்கூடிய விளைவுகளை அவர் அறிந்திருப்பாரா எனும் வினாவை எழுப்புவார்கள்.

அவர் அந்த விளைவுகளைப் பற்றிச் சிந்திக்கவில்லை. அகாலிகளுக்குள் உள்ள தீவிரவாதிகள் இந்தியாவின் ஒற்றுமைக்கும் நாட்டின் பாதுகாப்புக்கும் எதிராகத் திட்டமிட்டுக் கொண்டு இருக்கின்றார்கள் என்பதை அறிந்ததும் அவருக்கு வேறு வழியிருக்கவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர்கள் மாத்திரமன்றி அவருடைய சகாக்களில் சிலரும் அகாலியர்களுடன் ஒரு தற்காலிக உடன்பாட்டுக்கு வரவேண்டும் என இந்திராவுக்கு புத்திமதி கூறினர். சிலவேளைகளில் இப்புத்திமதி பிரயோசனமாய் இருந்திருக்கலாம். ஆனால் இது நிலைத்திருக்காது. மேலும் இது இந்திராவின் போக்குக்கு மாறானது. இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு மாறான சீக்கியருடைய அனந்தபூர் தீர்மானத்துக்குப் பின்னர் இந்திரா காந்திக்கு தற்காலிக உடன்படிக்கைக்கு இடம் இருக்கவில்லை. பொற்கோவிலுக்குப் படையை அனுப்புவதே ஒரே ஒரு வழியாக இருந்தது.

## வாழ்க்கையின் குறிக்கோள்

இந்திரா காந்திக்கு இந்தியாவின் ஒற்றுமையும் பாதுகாப்பும் வாழ்க்கையின் குறிக்கோளாக இருந்தது. இவற்றில் நம்பிக்கை இல்லாதவர்களென்று அவர் கருதியவர்களோடு அவர் ஒருவித தொடர்பும் வைத்திருக்கமாட்டார். இவற்றினால் தான் ஷேக் அப்துல்லாவுடனான பிணக்கு ஏற்பட்டது. பின்னர் அவரின் மகன் பரூக் அப்துல்லாவோடும் சண்டையிட்டார். பரூக்கை முதன் மந்திரிபதவியைவிட்டு இறக்குவதனால் ஏற்படக்கூடிய ஆபத்தினை அவர் நன்கு அறிந்திருந்தார். ஆனால் படைத்தலைவர்கள், உண்மைநிலையை எடுத்துக்கூறும் உத்தியோகத்தரை விலக்கி வருகின்றார் என்றும், இந்தியாவுக்கு எதிராக ஆலோசனை கூறுவோரை ஆதரித்து வருகின்றார் என்று கூறியதும் பரூக்கை முதன்மந்திரி பதவியினின்றும் விலக்குவதை விட வேறுவழி இருக்கவில்லை.

மேற்கூறியவற்றை நாம் அவரது செயலை ஆதரிக்கின்றோம் என்று கொள்ளத்தேவை இல்லை. ஆனால் இது அவருடைய மனோநிலையை நன்கு எடுத்துக்காட்டுகிறது. இங்கு எனக்கும் அவருக்கும் நடந்த ஒரு சம்பாஷணையில் அவர் எடுத்துக்கூறியதை குறிப்பிட விரும்புகிறேன். நான் பரூக் ஒரு தேசவிரோதி அல்லர் என கருதுகிறேன் என்று கூறினேன். அதற்கு இந்திரா ''அவர் தேசியவாதியுமல்ல: தேசிய விரோதியுமல்ல அவர் [illegible]ற்றவர் இவை எல்லாவற்றையும் அவர் செய்தார் என்று நான் கூறவில்லை. ஆனால் அவரால் அவற்றைத் தடுக்கமுடியவில்லை நாங்கள் மற்றவர் புரியும் தேசவிரோதச் செயல்களை எடுத்துக்கூறியும் அவர் வாளாவிருந்துவிட்டார்.

இதற்குப்பின்னர் ஷேக் குடும்ப விஷயங்களைப்பற்றிப் பேசினார். அப்துல்லா இறக்கும் தருவாயில் தான் அவருடன் நடாத்திய சம்பாஷணையை எடுத்துக்கூறியதோடு பரூக்கின் தகுதியில் தனக்கிருந்த நம்பிக்கையின்மையையும் தெரிவித்தார்.

காஷ்மீர் — ஜம்மு விஷயத்தை மிகவும் [illegible] வந்ததோடு அதன் பாதுகாப்பிலும் விசேடசிரத்தைகொண்டிருந்தார்.

காஷ்மீர் ஜம்மு விடயத்திலும், பஞ்சாப் விடயத்திலும், எந்த சமயத்திலும் ஒருவரின் சமயத்தைக் கொண்டு அவரில் நம்பிக்கையீனம் தெரிவிக்கவில்லை.

(இக் கட்டுரையின் ஆங்கிலத் தலைப்பு Indira's love affair with India இந்திரா இந்தியாவின் பழம் பெருமையிலும் எதிர்காலச் சிறப்பிலும் முழு நம்பிக்கை வைத்திருந்தார். இதை அவர் இறப்பதற்கு முன் வெளியிட்ட ''என்றுமுள்ள இந்தியா'' 'Eternal India' எனும் நூலில் நன்கு எடுத்துக் காட்டியுள்ளார் படங்களோடு கூடிய இப்பாரிய நூல் மிக அழகாக அச்சிடப்பட்டு அமெரிக்காவில் வெளியிடப்பட்டுள்ளது. இதன் விலை அமெரிக்க வெள்ளி 50)



வித்தியாசம் காட்டியதில்லை. இந்திரா பல மாநிலங்களுக்கு முஸ்லிம்களை கவர்னராக நியமித்திருந்தார். ராஜஸ்தானுக்கு பார்க்துல்லா, பீகாருக்கு கபூர், மகாராஷ்டிராவுக்கு அந்துலே. இவற்றை முஸ்லிம் வாக்கைப் பெறுவதற்காகச் செய்தாரென பலர் கூறினர்: அவர் ஒரு அரசியல்வாதியாக இருந்தமையினால் அவரின் செயல்களில் அரசியல் நோக்கங்கள் இருக்கலாம். ஆனால் இச்செயல்கள் அவருடைய இரு குணா

**கிரிலால் ஜெயின்**
**(ஆசிரியர் ரைம்ஸ் ஒப் இந்தியா)**
**தமிழ் வடிவம்: ச. அம்பிகைபாகன்**

சயங்களை நன்கு வெளிப்படுத்துகின்றன. அவர் மிகவும் துணிச்சல் உடையவர். அவருடைய தந்தை நேரால் ஒரு முஸ்லிமையேனும் முதன்மந்திரியாக நியமிக்க முடியவில்லை. அவர் முஸ்லிம்களுக்கு சில கௌரவ பதவிகளையே வழங்கினார். இந்திரா சமயத்தின் பெயராலோ அல்லது மாநில ரீதியிலோ வித்தியாசங்களைக் காட்டுவதில்லை.

மேற் கூறியவை அவருடைய இயற்கையான தன்மையைக் காட்டுகின்றன. இதனாலேயே அவருக்குப் பாதுகாப்பாளராக இருந்த சீக்கியரை மாற்றும் படி கேட்டபோது அவர் மறுத்து விட்டார் அவர் எக்காரணம் கொண்டும் ஒரு இந்தியன் தன்னைக் கொலை செய்வான் என்று கருதவில்லை. அவர் ஒரு இந்துவாக இருந்தமையினாலே அவரால் இப்படி தாராளமான கொள்கையை வைத்திருக்க முடிந்தது.

இளம் வயதிலே தன்னை ஜோன் ஒப் ஆர்க் போன்றவர் போல கருதினார் அவருடைய முடிவு இதை நன்கு எடுத்துக் காட்டியது மேலும் 19ம் நூற்றாண்டில் உள்ளவர்கள் போல் இவரும் கற்பனை நிறைந்தவர். இந்தியா அவருக்கு உணவுக்கு அல்லலுறும் ஒரு வறிய நாடாகத் தோற்றவில்லை. இந்தியா அவருக்கு ஒரு பெரும் நாடாகத் தோன்றியது. இந்திய நாகரீகம் எக்காலத்தும் மதிப்புக்குரிய தொன்றாகக் கருதினார்.

இந்திராவை ஒரு சாதாரணமான அரசியல்வாதியாகக் கருதுவோருக்கு அவர் இந்தியா மீது வைத்திருந்த நேசத்தை அறிய ஆச்சரியமாக இருக்கும். இந்தியாவின் பெருமையினை நன்கு அறிந்திருந்தபடியாலேயே அவருக்கு அந்த நேசம் ஏற்பட்டது. இந்தியா எக்காலத்தும் மதிப்புக்கும் உரிய நாகரிகத்தைக் கொண்ட நாடென்பது அவர் கருத்து.

இந்தியநாட்டின் மீது அவர் வைத்திருந்த பற்று அதன் பெருமையை நன்கு அறிந்த படியாலேயே ஏற்பட்டது. இந்த அம்சம் அவரை ஒரு சாதாரண அரசியல்வாதி என்று கருதுவோருடைய கருத்துக்கு மாறானதாகும்.

அவரை ஒரு அரசியல்வாதி என்று மட்டும் கருதுவது பலதரப்பட்ட ஆற்றல்கள் படைத்த ஒருவரைப்பற்றிய பிழையான கொள்கையாகும். சாதாரணமாக அவர் அதனை வெளிப்படுத்தாது விடினும் அவர் உணர்ச்சி மிகுந்தவர். யாரேனும் அவரின் முன்னால் அழுதால் அவருக்கு வேண்டியவற்றை இந்திராவிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அவர் தாயன்பு மிக்கவர் தன் மீது சார்ந்த வயோதிபர்களிடத்திலும் அன்பு செலுத்தினார். அவர் சாதாரணமாக கடினமாக நடந்து கொள்வதில்லை. தவிர்க்க முடியாத வேளைகளில் தான் கடினமாக நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

## மணப்பெண் போல் விளங்கினார்

மேற்கூறியவை அவருடைய முழு அம்சங்களையும் எடுத்துக்காட்டவில்லை இந்திரா அம்மையார் கடைசிவரைக்கும் ஒரு மணப்பெண் போல

(8ம் பக்கம் பார்க்க)

## அன்னையை இழந்தோம்

எதிர்நோக்கும் காரியங்கள் எண்ணிறந்தவாயினும் வாள்
எதிர் நோக்கும் தணப்பணிபோற் காசினியிற் தீர்த்து வைத்தீர்
சதிநோக்கும் தீயவர்கள் தான் நோக்கி வைத்த குறி
பதி நோக்கும் உன்னை இந்தப் பாரில் அழித்ததம்மா

வான்நோக்கிப் பார்த்து நிற்கும் வளர்பயிர் போல் நின்றவளை
தான் நோக்கிப் பார்த்து நின்ற தமிழீழ மக்கள் நலன்
நான் காத்தளிப்பனென்று நயவுரைகள் கூறி நின்றீர்
ஏன் பார்த்துனதுயிரை எடுத்து நமன் சென்றனனோ

மதிநோக்கிப் பார்த்திருக்கும் மலர்க்குமுதம் போலத் தமிழர்
விதிநோக்கிப் பார்த்திருந்த வேளையிலே கோளமுதர்கள்
சதிநோக்கியுன்னுயிரைத் தான் பறித்து விட்டதனால்
கதி நோக்கி நின்ற மக்கள் கண்கலங்கலாச் சுதம்மா

பண்ணோக்கும் பாவலர்கள் பாட்டிசைக்கும் போதினிலே
எண்ணோக்கும் எழுத்தசைகள் அடிதொடைகள் சேராமல்
மண்ணோக்கிப் பார்த்து மனக்கலக்க முற்ற தன்ன
விண்ணோக்கி நீபோன வேதனைகள் மெத்தவம்மா.

பாலஷயூர் ஆ. செகராசசிங்கம்

அன்னை இந்திராவை
நினைவு கூருகின்றோம்.

சகலவிதமான வாகனங்களுக்கும்
✱ கிறுங்சாவ்ற் — கிறைன்டிங்
✱ சிலின்டர் — றீபோறிங்
✱ சிலின்டர் — லைன்போறிங்
✱ கொனெக்சன் றொட் — கிறைன்டிங்

மற்றும் லேத் வேலைகளும் வெல்டிங் வேலைகளும்
திறம்படச் செய்து கொடுக்கப்படும்.

இயந்திரம்ஸ்
336, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
தந்தி—"கருணகிரி" தொலைபேசி: 24062

அன்னை இந்திராவை
மீண்டும் மீண்டும்
நினைவில் நிறுத்துவோம்

திருமண வைபவங்களா?
உல்லாசப் பயணமா?

அனைத்துக்குமான 'ஹொகுசு' பஸ்களை
சேவையில் ஈடுபடுத்தியுள்ளோம்.

குகானந்தன் ரவல்ஸ்

சுவையான சிற்றுண்டி வகைகளுக்கு

குகானந்த பவான்
(உரிமையாளர்: ஐ காலிங்கநடனம்)
435, கே. கே. எஸ். வீதி
தட்டாதெரு சந்தி. யாழ்ப்பாணம்.

# இந்திராகாந்திபற்றி

## கொன்ஸ்தான்தின் செர்னென்கோ

மாபெரும் இந்திய மக்களின் புகழ்பூத்த புதல்வியும், உன்னத ராஜீயவாதியும், பொதுவாழ்வுப் பிரமுகரும், சமாதானம் மற்றும் மக்களினங்களின் பந்தோபஸ்துக்கான உறுதிமிகு போராளியும், சோவியத் யூனியனின் மாபெரும் நண்பருமான இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியின் கொடிய படுகொலை முயற்சியில் அகால மரணமடைந்தமை சோவியத் மக்கள் ஆழ்ந்த வருத்தத்துடனும் துயரத்துடனும் தெரிந்து கொண்டனர்.

இந்திரா காந்தியின் மரணம் இந்தியாவுக்கு மாபெரும் இழப்பாகும். வெகுசிறப்பு வாய்ந்த பிரதமர் பதவியில் நீண்ட காலமாகப் பணியாற்றிய திருமதி இந்திரா காந்தி ஒவ்வொரு துறையிலும் இந்தியாவின் வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்துக்காகவும், அதன் சர்வதேச நிலைப்பாடுகளை வலுப்படுத்துவதற்காகவும் பெரும் பணியாற்றினார்.

இந்திரா காந்தி சர்வதேச அரங்கில் பெரும் கௌரவத்தையும், ஆழ்ந்த மரியாதையையும் பெற்றிருந்தார்; அவர், வலுவான சமாதானத்துக்காகவும், மக்களினங்களின் பந்தோபஸ்துக்காகவும், நாடுகள் மத்தியில் சமத்துவமான ஒத்துழைப்புக்காகவும் செயலூக்கமுடனும் விடாப்பிடியோடும் போராடினார். அணிசேரா இயக்கத்தின் ஐக்கியத்தை வலுப்படுத்தவும் அதன் சர்வதேச கௌரவத்தை உயர்த்தவும் இந்திரா காந்தி மாபெரும் சேவையாற்றினார்.

இந்திரா காந்தி சோவியத் யூனியனுக்கும் இந்தியாவுக்கும் இடையே நட்புறவை வலுப்படுத்தவும், சர்வவியாபகமான ஒத்துழைப்பை வளர்க்கவும் அதிக முக்கியத்துவம் கொடுத்தார். துயரந்தோய்ந்த இந்நாட்களில் இந்தியக் குடியரசுடன் நேய உறவுகளை வலுப்படுத்துவது என்ற சோவியத் யூனியனின் நிலையான விருப்பத்தை சோவியத் தலைமை மீண்டும் வலியுறுத்துகிறது.

இந்திரா காந்தியின் நாமம் நன்றியுள்ள சோவியத் மக்களின் நினைவில் என்றென்றும் நிலைத்திருக்கும்.

—சக்சின்

## மறையாத தீபச்சுடர்

பாரதத் தாயே
பாரின் ஒளிவிளக்கே
சமாதானப் புறாவே — இன்று நீ
சாந்தி கொண்டுள்ளாயோ
ஓராண்டு காலமும் வந்தம்மா — உன்
ஓசைபடக்கிய பின்னே
ஈழத் தமிழர் துன்பத்தை
கவுடன் அணுகினாயே
எம்மிதய ஒளிவிளக்கே
என்றும் நீ மறையாத தீபச்சுடர்?

— வே. தயேந்திரன்.

கடின உழைப்புக்கு நிகர் எதுவுமில்லை.

அன்னை
இந்திரா காந்தி

அன்னை இந்திரா காந்தியின் அழகிய பிக்சர்
20 மில்க் வைற் நீல சோப் உறைகளை
8 மில்க் வைற் பெரிய பார் சோப் உறைகளை
2 கப்ப மில்க் வைற் சோப் மேலுறைகளை
அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

அன்னை "இந்திரா"
ஈழமக்களின் இணையற்ற நண்பர்.

இந்திரா சுடரொளி உலகெங்கும் ஒலிக்கட்டும்.

பொ. கனகநாயகம்,
முருகன் ஸ்ரோர்ஸ்,
சிறுப்பிட்டி.



அன்னை இந்திரா
மறைந்தாலும்
அன்னாரின் பணி
ஈழமக்களின் இதயங்களில்
என்றும் ஒலிக்கும்!!

நினைவுகூருகின்றோம்!!

NATIONAL
நஷனல்

ரெலிவிஷன்
றேடியோ

அனைத்தையும் உத்தரவாதத்துடன்
பெற்றுக்கொள்ள நம்பிக்கையான
ஸ்தாபனம்

வி. கே. இராஜரட்னம்
95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

அன்னை "இந்திரா"வின்
ஆத்ம ஈடேற்றத்துக்கு இறைஞ்சுகின்றோம்.

யாழ் நகரில் புதிய நிறுவனம்
கங்கா என்ரபிறைசஸ்

அச்சக சாதனங்கள், காகிதாதிகள், பாடசாலை
உபகரணங்கள், இனிப்பு, பிஸ்கட் வகைகள்,
அனைத்துக்கும் நியாயவிலை ஸ்தாபனம்

GANGA ENTERPRISES
358, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 22408

அன்னை இந்திராவை
நினைவு கூருகின்றோம்.

வடமாகாணத்தில் கைதேர்ந்த நிபுணர்களால்
சகல வாகனங்களுக்கும்,

★ கிறுங் சாவ்ற் – கிறைன்டிங்
★ என்ஜின் – றீபோறிங்
★ என்ஜின் – றீசிலீவிங்

மற்றும் லேத் வேலைகளும்
திறம்பட செய்து கொடுக்கப்படும்.

**ஒட்டோ சப்ளையேர்ஸ்,**
317, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24168



# அன்னை இந்திராவை

## மீண்டும் நினைவுறுத்துகின்றோம்

உள்நாட்டு; வெளிநாட்டு "செரமிக்" பொருட்கள்
எஸ் லோன் பைப் வகைகள், இத்தாலியில்
இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி
விசேடமான பலவர்ண பாத்றூம் செற், மாபிள்
கற்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே நிறுவனம்.

யாழ். மாநகரசபை எல்லைக்குள் இலவச விநியோக சேவை

✶ மொத்த வியாபாரிகளுக்கு விசேடகழிவுண்டு.

**கோல்டன் செரமிக்ஸ்**
இல: 3 1/5, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.



ஈழத் தமிழர்களின்
இன்னல்களை "களை"வேன் என்றுயே
அன்னை இந்திராவே....

உன் நினைவால் இன்றும் கலங்குகின்றோம்.

**சிவகுமார் ஸ்ரோர்ஸ்,**
282, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23738



# அன்னை "இந்திரா"வே,

நீ மடிந்த செய்திகேட்டு
புலம்பினோம்; கதறினோம்.
ஓராண்டு மறைந்துவிட்டது.

உள்ளூர் நவதானியங்கள்,
"நெஷல்ஸ்"பாலுணவுவகைகள்,
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெறுவதற்கு ஒரே ஸ்தாபனம்

சாய்ப்புச் சாமான்களின் மாளிகை

**குகன் ஸ்ரோர்ஸ்,**
180 (380), ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24427



இந்திராவே எங்கு சென்றாய்!!
உம்மை நம்பினோம், காலம்
எம்மை கலங்க வைத்துவிட்டது.

சகலவிதமான உள்நாட்டு, வெளிநாட்டு
செரமிக் பொருட்களுக்கும்
மற்றும்
எஸ்லோன் பைப் வகைகளுக்கும்
சிறந்த ஸ்தாபனம்

**வி மா கி**
27/3, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24013

கிளை: விமாகி எலெக்றிக்கல்ஸ்
68/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24278



# காலங்கள் மறையலாம்!!
# அன்னை "இந்திராவே" உனை மறவோம்.

சகலவிதமான றேடியோ, ரெலிவிஷன், மணிக்கூடு, விளையாட்டுப் பொருட்கள்,
அன்பளிப்புப் பொருட்கள் அனைத்துக்கும் வாலாம்பிகா — நம்பிக்கையான பெயர்.

**ஸ்ரீ வாலாம்பிகா** ரேட் சென்ரர்
2 1/5, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# இந்தியா மீது இந்திரா....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

விளங்கினார். அவர் அன் கோலத்தை வெறுத்தார். அவர் எப்போதும் தேச உறுதியுடன் விளங்கியதோடு மட்டுமன்றி அழகாகவும் தோற்றமளித்தார். அவர் பாரத தேசத்தில் அதிகமான ஒன்றையும் காணவில்லை. இதை அவர் எழுதிய "என்றுமுள்ள இந்தியா" (Eternal India எனும் அழகிய படங்களுடைய புத்தகத்தில் நன்கு எடுத்துக் காட்டியுள்ளார். அவர் எங்கும் எதிலும் நல்லதையே கண்டார்.


## அன்னை இந்திராவுக்கு எமது அஞ்சலி

பாலுணவுப் பொருட்கள், உணவுப் பண்டங்கள், தமிழ் ஆங்கில தினசரிகள், நவதானியங்கள் அனைத்துக்கும்...

**பொ. சதாசிவம்**

சிவன் ஸ்ரோர்ஸ்

வளாகச்சந்தி, திருநெல்வேலி.


இந்திரா காந்தி அவர்கள் பெருமை படைத்தவர். ஜவர்ஹர்லால் நேருவின் புத்திரி என்பதிலும் மோதிலால் நேருவின் பேர்த்தி என்பதிலுமே பெருமை கொண்டார். இவற்றுக்கு மேலாக தான் ஒரு இந்தியன் என்பதில் அதிக பெருமை கொண்டார். இந்தியாவின் பெருமையை எடுத்துக்காட்டுவதற்காக 1982 ஆம் வருடத்தில் பிரிட்டனில் இந்தியாவைப் பற்றிய ஒரு விழாவினை நடாத்தினார் (Festival of India) இப்போது அப்படி ஒரு விழா அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது.

இந்தப் பெருமை, வல்லரசுகளோடு தொடர்பு கொள்ளும் போதும் வெளிப்பட்டது. 1971 ஆம் ஆண்டில் இந்தியா ஒரு இக்கட்டான நிலைமையில் இருந்தது. ரஷ்யாவின் உதவியை நாடி அங்கு சென்றார். இவர் போன தினத்தில் ரஷ்ய தலைவர் பிரஷ்னேவ் அங்கு இல்லாதபடியினால் அவருக்கு அடுத்தவரான கொசிஜின் உடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. இந்தியாவின் கௌரவத்தைக் காப்பாற்ற அவர்போல சமநிலையிலுள்ளவருடனேயே பேச்சுவார்த்தை நடத்த விரும்பினார். பங்களாதேஷ் யுத்தம் நடைபெற்ற சமயத்தில் அவர் வாஷிங்டன் சென்றார். இவ்விடயமாக நிக்ஸனோடு இவர் கடுமையாகப் பேசும் பொழுது அவர் விறைத்துப் போனார்.

ஆசிய விளையாட்டுக்களையும் அணிசேரா மாநாட்டினையும் இந்தியாவில் திறம்பட நடாத்திக் காட்டியதன் வாயிலாக இந்தியா இவ்வாறான பெரும் நிகழ்ச்சிகளை நடத்தக்கூடிய வல்லமை படைத்த நாடென்பதை உணரச் செய்தார். இவற்றை சில இந்தியர்கள் அறிந்து கொள்ளவில்லை. இவர் வீணே பணத்தை விரயம் செய்கிறார் என்று சாடினர் இவர்கள். கூற்று இந்திரா மீதிருந்த குரோதத்தினாலோ அல்லது இந்தியாவின் பெருமையை அறியாமையினாலோ கூறப்பட்டவையாகும். ஆனால் இக்கூற்று இந்திராவுக்கு அதிர்ச்சியளித்தது.

இந்திரா அதிகாரத்திலிருக்கும் வரைக்கும் ஒருவரும் இந்தியாவோடு சேட்டைவிட எண்ணியதில்லை. பூட்டோவை தூக்கிலிட பாகிஸ்தான் தலைவர் ஸியா உல் ஹக் தீர்மானித்தபோது பல பாகிஸ்தானியர் இந்திரா காந்தி இருந்திருப்பின் பூட்டோவின் உயிரை படைவீரரை அனுப்பியேனும் காப்பாற்றியிருப்பார் என பேசிக்கொண்டனர். ஆனால் இந்திரா காந்தி இவ்விஷயத்தில் தலையிட்டிருக்க மாட்டார். அவர் காப்பாற்றுவார் என்று பேசிக்கொண்ட பாகிஸ்தானியர் இந்திரா காந்தியின் ஆற்றலிலும் மனிதாபிமானத்திலும் அவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தனர்.

பாகிஸ்தான் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த ஒரு அமெரிக்க செய்மதி மூன்று இந்திய விமானங்களை அவதானிக்க முடியாமல் போனபோது அவை பாகிஸ்தானின் அணு நிலையங்களை தாக்கப் போகின்றன என்று எண்ணினர். ஆனால் பாகிஸ்தானின் அணு நிலையங்கள் எல்லாம் நிலத்தின் கீழ் வைரமான முறையில் அமைக்கப்பட்டுள்ளன என்பதனை அமெரிக்கர்கள் அறியவில்லை போலும். ஆனால் இந்திய அணு நிலையங்கள் யாவும் நிலத்தின் மேல் இலகுவில் தாக்கப்படக்கூடிய முறையில் அமைக்கப் பெற்றிருந்தன. ஆனபடியால் அமெரிக்கர்கள் எண்ணியது போல ஒரு புத்தியீனமான செயலில் இந்தியா இறங்கியிருக்க மாட்டாது.

முன்பு நான் குறிப்பிட்ட 'தனக்கு ஒரு வேலை உண்டு செய்வதற்கு' என்று இந்திரா கூறியதில் இருந்த மூன்று அம்சங்கள் பெறப்படுகின்றன.

1. இந்தியாவை அதன் பண்டைய நாகரிகத்துக்கு ஏற்றவாறு ஒரு பலமுள்ள நாடாக்குவது.
2. இவ்வாறு செய்யும் போது வலிதமான வழிவகைகளைக் கையாள வேண்டி நேரிடும். முடிவு நன்மையாக இருப்பின் கையாளப்பட்ட வழிவகைகளை ஆராய்வதில் அதிக பயனேதுமில்லை.
3. இந்தப் பணியை இந்திராவே செய்து முடிக்க வேண்டும்

மேற்கூறியவற்றினால் இந்திரா செய்த எல்லாம் சரியெனக் கொள்ள முடியாது. 1975 ம் ஆண்டில் உயர்நீதி மன்றம் இந்திராவுக்கு மாறான ஒரு தீர்ப்பை வழங்கிய போது, இவர் பதவியிலிருந்து விலகியிருக்க வேண்டும். அதை விட்டு அவர் ஒரு அவசரகால நிலைமையைப் பிரகடனஞ் செய்தார். இதை ஒரு பாரதூரமான பிழையாகக் கருதல் கூடாது; ஏனெனில் அவர் குறுகிய காலத்தில் பொதுத் தேர்தல் வைத்துவிட்டார். ஆனால் சற்றேனும் மதியில் அவர் உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பை மதித்திருக்க வேண்டும் என்ற கருத்து நிலவிவருகிறது.

மேலும் 69 ம் ஆண்டிலும் 78 ம் ஆண்டிலும் காங்கிரஸில் இப் பிளவை ஏற்படுத்தினார். அதிகாரத்தினைத் தன் கையில் வைத்திருக்க வேண்டும் என விரும்பியே இவ்வாறு செய்தார்.

ஆனால் பிளவுபட்ட காங்கிரஸ் கட்சிகளுள் இந்தியாவைக் கொண்டு நடாத்தக்கூடிய ஒருவரும் இருக்கவில்லை. மொரார்ஜி தேசாய் பிரதமராக வந்தும் அவரால் இந்திய அரசை கொண்டு நடத்த முடியவில்லை. ஒரு நாளேனும் அவருடைய அதிகாரம் செல்லுபடியானதென்று கூற முடியாது.

ஒற்றுமையைக் காண்பது எப்போதும் பொருத்தமாக இருக்காது. ஆனால் மகாத்மா காந்திக்கும் இந்திராவுக்கும் ஒரு பொருத்தத்தைக் காணலாம். காந்திக்கு பிரிட்டிஷாரிடமிருந்து இந்தியாவை மீட்டது ஒரு பெரிய காரியமாக இருக்கவில்லை. இந்தியாவின் ஒற்றுமையை பாதுகாப்பதையே பெரிதாகக் கருதினார். அப்போதுதான் 'நது ராம் கோட்சே' காந்தியின் உயிரை மாய்த்தான். இந்திரா சீக்கியர் இந்தியாவின் ஒற்றுமையை குழப்ப எத்தனித்த போது அதற்கு எதிராகப் போராடினார். சீக்கியரின் நடவடிக்கைகளை எதிர்த்த போதுதான் சத்வந்-சிங், பெயன்ட்சிங் அவர் உயிரை மாய்த்தனர்.

இந்திரா இறந்து விட்டார்; அவர் நாமம் நீடூழி வாழ்க!


**Lipton**

# எச்சரிக்கை!

## லிப்டன் லாவோஜி

போலி லாவோஜி பக்கெட்டுகள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளதாக எமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க வர்த்தக அடையாள சட்டத்தின் பிரகாரம், பதிவுசெய்யப்பட்ட லாவோஜி வர்த்தக அடையாளத்தை மீறும் தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் அல்லது பொருட்களை விற்பனை செய்வோர்மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடியும். எனவே போலி லாவோஜிகளை தயாரிப்போர் அல்லது விற்பனை செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அசல் லாவோஜி தேயிலையை எமது கிளைகளில் அல்லது எமது மொத்த வியாபாரிகள் அல்லது சில்லறை விற்பனையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.





**லிப்டன் சிலோன் லிமிட்டெட்,**

த. பெ. எண் 86,

கொழும்பு.

லிப்டன் லாவோஜி
அதி சிறந்த தேயிலைத் தூள்.

## ஈழமக்கள் அன்னையானாய்!




நாடுதனைப் பொன்னுலகாய் நல்லுழைப்பா லாக்குவதே
நலங்காணும் வழியென்று நெஞ்சுவக்கப் பணிசெய்தாய்
மூடுமிருட் காடழித்த மோனநிலா வெனக்காய்ந்து
மக்களது புன்னகையே மண்ணுலகில் தாவநின்றாய்
அடுகளப் புற்றரைக்கு அழைக்கவந்த மேய்ப்பன்போல்
அறிவூட்டிச் செந்நெறியில் ஆளவந்தாய் பாரதமே
விடெனக்கு என்றவுந்தன் வளர்கீர்த்தி கண்டெரிந்த
வஞ்சகரின் துப்பாக்கி வரவாளாய் மலர்ந்ததம்மா!

தன்பணியா லுயர்ந்தவளே தலைவனென்று மக்களுற
தாழ்வகற்றி மறக்கவொண்ணாத் தொண்டுசெய்தாய்
-போதுமென்ற
பொன்மனத்தா னென்னும் பிரதிபலன் கருதாது
பதவித்தீ யிற்கருகாப் பெருமையுற்றாய் கடலைப்போல்
அன்புணர்த்தாக் தனையளித்து அருகக் கண்ணீரில்
அலைமோதி நின்றிருந்த ஈழமக்க ளன்னையானாய்
மன்னுபுகழ் தழைக்கவந்த மக்களாட்சி மெனுமிகாவில்
மதுரகீத மிசைத்தகுயில் மீளாமற் பறந்ததுவே!

— மாஷையூர் மு. சிங்கராயர்

## திருமலை அகதிகள்; குழுவுக்கு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

திருமலையிலிருந்து பாதிக்கப்பட்டு அகதிகளாக வந்து யாழ். அகதி முகாம்களில் தங்கியிருக்கும் தமிழ்மக்களை மீண்டும் அவர்களது சொந்த இடங்களுக்கு திருப்பி அனுப்புவதற்கேற்ற ஒழுங்குகளை விரைவில் செய்யுமாறும், அவர்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பும் பட்சத்தில் அங்கு தங்கி தொழில் செய்வதற்கேற்ற பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும்படியும் கோரி அகதிகள் புனர்வாழ்வுச்சபை தலைவர் டாக்டர் [illegible] கண்காணிப்புக்குழு உறுப்பினர் பேராசிரியர் [illegible] தம்பிக்கு மகஜரொன்றை நேற்று முன்தினம் அனுப்பியுள்ளார். (ச)


சமாதானத்தின் காவலனே எங்கு சென்றாய்!!




# மலாயன் கபே

யாழ்ப்பாணம்.

போன்: 24074 - 22091




# நினைவஞ்சலி

மறைந்த பிரதமர் அன்னை இந்திராவே!!

சாய்ந்துவிட்ட சமாதான புருவே
வீழ்ந்துவிட்ட விடுதலைப் புருவே
அன்னையை இழந்த மைந்தர்கள்
அமைதியை இழந்தனர்
மாதாவை இழந்த மறவர்கள்
மனம் வெகுண்டனர் என்றும்
நின் அருமை மறவாத
உள்ளம் கொண்டனர்!

# தேவர்குலம் நலம்புரிச்சங்கம்





அன்னையும் மைந்தனும் ஒன்றாய் கண்டனர்!!
உலகமே பூரித்தது!!!
எங்கு சென்றாயோ!!

தவிக்கின்றோம். அன்னை இந்திராவே
எமது நெஞ்சின் நினைவஞ்சலிகள்.

- எஸ் லோன் பைப் வகைகள்
- எவரெடி பற்றறிகள்
- சி. பி. ஈ. பல்புகள்
- மின்சார உபகரணங்கள்
- மின்னியல் பொருட்கள்
- மின் மோட்டர்கள்
- நீரிறைக்கும் யந்திரங்கள்
- மின்சார அலங்கார சாதனங்கள்

அனைத்துக்கும் ஒரே ஸ்தாபனம்

மொத்த வியாபாரிகளுக்கு விசேட கழிவு

# நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்

141 – 143, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.

போன்: 23016



"ஸ்டொப்" கிளட்ச் & பிறேக் புளூயிட்

மலிவான விலைக்கு
போதியளவு
பெற்றுக்கொள்ளலாம்

STOP
Hydraulic BRAKE & CLUTCH FLUID




தயாரிப்பு:
கெமனெக்ஸ் லிமிட்டெட்

450 மிலி - ரூ. 28/25
250 மிலி - ரூ. 16/45

ஐ. நா. .....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஆப்கானிஸ்தானிலுள்ள சோவியத் சார்பு பாபராக் கார்மால் அரசாங்கம் சட்டபூர்வமான ஆப்கான் அரசாங்கமல்ல. எனவே இதற்கு ஐ. நா. ஸ்தாபனத்தில் இடமளிக்கக் கூடாது.

ஆப்கானில் சோவியத் ஆக்கிரமிப்புக்கெதிராக கிளர்ச்சி நடத்திவரும் எமது கூட்டு முன்னணிக்கே ஐ. நா. பிரதிநிதித்துவம் தரப்பட வேண்டும்" என்று அக்குழுவினர் தெரிவித்தனர்.

ஆப்கானிஸ்தானில் சோவியத் இராணுவக் கொடுமைகளையும் இவர்கள் விபரித்தனர். இக்குழு சார்பில் இதன் தலைவர் திரு. ஹொஃமட்டியார் என்பவர் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளித்தார்.

அமெரிக்க அதிபர் திரு. ரொனால்ட் றீகனின் பிரதிநிதியான ஜெனரல் வேர்னன் வோல்ட்டர்ஸையும் இவர்கள் சந்தித்தனர். (ஸ)


**ஈஸ்வர மினி**

10-30, 2-30, 4-45, 6-45

Fred Wiliamson...

NEW BABEREYENS

விறுவிறுப்பான நவீன ஆயுதங்கள் கொண்ட நவீனரக மனிதர்களின் சண்டைப்படம்.

**எம்பயர்**

7 அகலத்திரையில்

10-30, 2-30, 6-30, 9-15

அர்ஜுன், இளவரசி

"யார்"

அன்னை இந்திராவின் இறுதி யாத்திரை பற்றிய படம் இத்துடன் காண்பிக்கப்படும்.

**மனோகரா வெண்திரையில்**

இன்று முதல்

10-30, 2-30, 6-30

மோகன், பூர்ணிமா நடித்த

**பயணங்கள் முடிவதில்லை**

(கலர்)

இனிய பாடல்கள் நிறைந்த படம்

**ஸ்ரான்லி மினி**

5"x5" திரையில்

10-30, 12-30 2-30, 4-30 6-30

**XTRO TERROR**

ஒரு டிராகுலா பாம்பின் முட்டையை அருந்தும் ஒரு மனிதனின் அதிபயங்கரப் படம். இருதய பலவீனம் உள்ளவர்கள் இப்படத்தைத் தவிர்க்கவும்.

(Adults Only)

**வெலிங்டன்**

10-30, 2-30, 4-15, 6-30

பயங்கர காட்சிகள் நிறைந்த

POLTER GRIST

[கலர்]

வயதுவந்தவர்களுக்கு மட்டும்

**லிடோ சினிமா**

10-30, 2-15, 4-30 6-30

**Playing with Fire**

கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும். ஆண் பெண் பாலியல் காட்சிகள் நிறைந்த படம். முதல் முதலாக யாழ்ப்பாணத்தில் காண்பிக்கப் படுகிறது.


# இன்றைய பலன்

மாதம்:- ஐப்பசி
திகதி:- 15 (31 - 10 - 1985)
கிழமை:- வியாழன்
திதி:- திருதியை
நக்ஷத்திரம்:- கார்த்திகை
காலை 8 -26ன் மேல் ரோகிணி

**மேடம்:-** எதிர்பாராத வகையில் பொருள் விரயமாகும். வியாபாரத் துறையில் பிணக்குகள் தோன்றி மறையும். சிந்தையில் குழப்ப நிலையும் தோன்றும்.

**இடபம்:-** நரம்பு சம்பந்தமாக அசௌகரியம், உடல் மெலிவு தோன்றும். பிணிக்கு இடம் கொடாது சுகாதாரத்தைப் பேணவும்.

**மிதுனம்:-** சோதனைமிக்க மனத்துடன் இருப்பீர்கள் எதிலும், நிறைவு தென்படும். முதியவர் ஒருவரின் அறிவுரை உங்களுக்கு புதிய பாதையைக் காட்டும்.

**கடகம்:-** இருள் மண்டிக் கிடக்கும், இன்று ஏமாற்றம் தாக்கும், குடும்பத்திலும், உடல் நலம் பாதிக்கப்படலாம்.

**சிங்கம்:-** கருத்து வேற்றுமைகள் மறைவதற்கு இடமுண்டு தங்கள் திறமைக்கு முன்பு மற்றவர்கள் சிரம் தாழ்த்துவார்கள், விரும்பிய பொருள் இன்று கிடைக்கலாம்.

**கன்னி:-** இனத்தவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், நீண்ட பயணம் குறித்து திட்டமிடப்படலாம். சுபதினம்.

**துலாம்:-** கருத்தினில் மோசம், வாட்டும் பிணியும் தானே, மிகையான கோபத்தினால் மனதும் பாழாய்ப் போகும்.

**விருச்சிகம்:-** நீண்டநாள் எதிர்பார்த்த நல்லிருப்பம் இன்று ஏற்படமுடியும், குடும்ப வைபவங்களில் பிணைப்புகள் இறுகும்.

**தனுசு:-** எண்ணியதில் தடைகள் தோன்றும் நண்பர்களும் காலை வாரிவிடக்கூடும் திடமனம் வேண்டும்.

**மகரம்:-** நல்லதைச் செய்வீர்கள், பிரமுகர்கள் உங்களைத் தேடி வருவார்கள். சமூகத்தில் மதிப்பு உயரும்.

**கும்பம்:-** இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு இன்று சிறப்பான தினம். கல்வியிலும் அபிவிருத்தி காணப்படும்.

**மீனம்:-** முக்கியமான சந்திப்பு ஒன்று கிடைக்கும் முதியவர் ஒருவரின் ஆதரவும் கிடைக்கும் குடும்பத்திலும் சுமுகமான சூழ்நிலை தென்படும்.

திருமலை
வே ரவீந்திரன்

## உரத்தட்டுப்பாடு

[யாழ்ப்பாணம்]

1800 தொன் உரவகைகளை ஏற்றிக்கொண்டு அடுத்த மாதம் 6-ம் திகதி காங்கேசன்துறைமுகத்துக்கு கப்பல் ஒன்று வரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## பின் முற்றுக்கும் கட்டளையின் அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

மீசாலை வடக்கைச்சேர்ந்த காலஞ் சென்ற சுப்பிரமணியத்தின் மரணசாதனம் சம்பந்தமாக,

1. மயில்வாகனம் தம்பிராசா
2. மனைவி சிவபாக்கியம்-
-இருவரும் மீசாலைவடக்கு
—மனுதாரர்கள்

சொத்தறுதிக்காரர்
வழ. இல: T 1230

எதிராக

1. ஆசைப்பிள்ளை கைம்பெண் பொன்னம்மா பசுமாலை சுழிபுரம்
2. ஆறுமுகம் கைம்பெண் சின்னத்தங்கம் துன்னாலை வடக்கு கரவெட்டி
3. சிவசுப்பிரமணியம் சிவகுருநாதன்
4. பெண் சிவகாமிப்பிள்ளை
-இருவரும் மீசாலை வடக்கு
—எதிர்மனுதாரர்கள்

மேலே சொல்லப்பட்ட காலஞ்சென்றவரின் மரணசாதன ஒப்பேற்றுதல் சம்பந்தமாக மேலே குறிக்கப்பட்ட இலக்க சொத்தறுதிகார வழக்கு இம்மன்றில் தாக்கல் செய்யப்பட்டு பின்முற்றுக்கும் கட்டளை பதியப்பட்டுள்ளதென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எனவே எவரேனும் இதில் அக்கறையுள்ளவர்கள் இந்த நீதிமன்றில் 1985ம் ஆண்டு மார்கழி மாதம் 6ம் திகதி முற்பகல் 9 மணியளவில் மன்றில் சமூகம் கொடுத்து பின்முற்றுக்கும் கட்டளை ஏன் முற்றுனக் கட்டளை ஆக்கக்கூடாது என்பதற்கு ஏதேனும் காரணம் இருப்பின் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறீர்கள்.

1985ம் ஆண்டு புரட்டாதி மாதம் 24 திகதி

மன்றின் கட்டளைப்படி
சண்முகம் நடராசா
பதிவாளர்

தயாரிப்பு
ச. சச்சிதானந்தன்
மனுதாரின் சட்டத்தரணி
1880

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி அந்தோனிப்பிள்ளை இராயப்பு (சின்னப்பு)

அன்னை மடியில்:
04-12-1933

ஆண்டவனடியில்:
31-10-1978



அவர்களின் ஆத்ம சாந்திக்காக சாவகச்சேரி அர்ச். அந்தோனியார் ஆலயத்தில் 31-10-85 மாலை 6-00 மணிக்கு திருப்பலிப் பூசை ஒப்புக் கொள்ளப்படும். இவ்வைபவத்தில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தி இராயப்பு (சின்னப்பு).
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அன்னை வேளாங்கண்ணி இல்லம்,
சங்கத்தானை, சாவகச்சேரி. 1501

## 6-ம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

இரத்தினராசா மோகனராஜா (மோகன்)

ஸ்தாபகர். ஸ்ரீரும்ஸ் வீடியோ சென்ரர்,
'ரத்னவாசா', சந்தை வீதி, உடுப்பிட்டி.



தோற்றம்:
03- 01- 1960

அழிப்பு:
09- 05- 1985

அன்புடையீர்!

வரும் 02- 11- 1985 சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் கீரிமலையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரிகைகளிலும், ஆத்ம சாந்திக் கிரிகைகளிலும் பிரார்த்தனையிலும் மதியபோசனம் ஆகியவற்றிலும் குடும்பத்தினருடன் வந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
மனைவி மக்கள். தந்தை, தாய், சகோதரங்கள், மைத்துனர்.
ரத்னவாசா,
சந்தை வீதி, உடுப்பிட்டி. 1508


உங்கள் தேவை? எங்கள் சேவை!
அதுவே
சமுத்திரா மல்ரி சேவிசஸ் வழங்கும்

# திருமண சேவை

ஈழத்திருநாட்டில் தமிழ் மக்கள் வாழும் எல்லாப் பகுதிகளிலுமிருந்து எம்மாலும் எமது விசேட பிரதிநிதிகளாலும் அவ்வப்போது கிடைக்கப்பெற்ற திருமணத்திற்காகக் காத்திருக்கும்

★ டாக்டர்கள் ★ என்ஜினியர்கள் ★ எக்கவுண்டன்ஸ்
★ பட்டதாரிகள் ★ ஆசிரியர்கள் ★ வங்கி ஊழியர்கள்
★ அரச, கூட்டுத்தாபன ஊழியர்கள் ★ வர்த்தகர்கள்
★ விவசாயிகள் ★ வயதுவந்தோர் ★ தாரமிழந்தோர்
★ விதவைகள்

வரை சகல தரத்திலும் [ஆண் - பெண்] மணமக்கள் இருக்கிறார்கள்.

விபரங்களுக்கு நேரடியாகவோ - கடித மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம்:

# சமுத்திரா மல்ரி சேவிசஸ்,

இல: 303, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

